## தமிழ் வகுப்பேடு

வகுப்பு : பத்து

### இயல்3. கோபல்லபுரத்து மக்கள் (துணைப்பாடம்)

- கி.ராஜநாராயணன்.

குறிப்புச்சட்டகம் :

- முன்னுரை
- அதிகாலைபொழுது
- புதியவனின் வருகை
- அன்னமய்யா புதியவனைக் காணுதல்
- விருந்தோம்பல்
- அருகெடுப்போர் வரவேற்றலும் , பகிர்ந்துண்ணலும்
- முடிவுரை

கதை மாந்தர்கள் : கிராமத்து மக்கள் , புதியவன் , அன்னமய்யா சுப்பையா.

**முன்னுரை :**

கிராமத்து மக்களின் விருந்தோம்பல் பண்பு மனதிற்குள் எப்பொழுதும் பசுமையாக இருக்கும். அவர்களின் இயல்பான வரவேற்பும், எளிமையான உணவும், களைப்பை மறக்கடிக்கச் செய்யும் தன்மையுடையன. பசித்த வேளையில் வந்தவர்களுக்கு தம்மிடம் இருப்பதையே பகிர்ந்து கொடுக்கின்ற நேயம் கிராமத்து விருந்தோம்பல். இந்நிகழ்வு கண்முன் காட்சியாகிறது.

**அதிகாலைப்பொழுது :**

அதிகாலை நேரத்தில் சுப்பையாவின் நிலத்தில் அருகெடுத்துக் கொண்டிருந்தார்கள். அருகெடுத்து முடித்தவுடன் ஓர் இடத்தில் அமர்ந்தனர். அப்பொழுது தொலை தூரத்தில் புதியவன் ஒருவனை அழைத்துக் கொண்டு அன்னமய்யா வருவது தெரிந்தது.

**புதியவன் வருகை :**

புதியவனின் தாடியும் , அழுக்கடைந்த ஆடையும் , தள்ளாட்ட நடையும் , பார்ப்பதற்கு வயோதிகனைப் போலவும் , சாமியாரை போலவும் இருந்தது.

## அன்னமய்யா புதியவனைக் காணுதல் :

அன்னமய்யா தற்செயலாக அந்த பக்கம் வந்த புதியவனைக் கண்டான். அப்புதியவன் முதியவனோ , சாமியாரோ இல்லை. அவன் ஒரு வாலிபன். பசியால் வாடிப்போயிருந்த அவன் அன்னமய்யாவைக் கண்டவுடன் புன்னகைத்தான். ஆவ்வூர்பக்கம் பல தேசாந்திரிகள் விதவிதமான மொழிகளை பேசிக் கொண்டு செல்வது வழக்கம். அதிலும் லாட சன்னியாசிகள் வேட்டிக் கட்டுவதே புதுவிதம். அவர்களைப் போல வேட்டி அணிந்து குழந்தைகள் விளையாடுவது வழக்கம்.

## விருந்தோம்பல் :

அன்னமய்யாவை பார்த்த அப்புதியவன் “தம்பி , கொஞ்சம் குடிக்க தண்ணீர் கிடைக்குமா? ” என்று , தமிழில் கேட்டான். அவனை அழைத்துக் கொண்டு அருகெடுப்போர் கொண்டு வந்திருக்கும் கஞ்சியில் சிறிது வாங்கி கொடுக்கலாம் என்ற எண்ணத்தோடு அருகில் இருந்த வேப்பமரத்தடிக்கு வந்தான். அங்கே கருப்பு கலயங்கள் மண்தரையில் புதைக்கப்பட்டிருந்தன. அன்னமய்யா அக்கலயத்தில் ஒன்றினை எடுத்து நீராகாரத்தையும் , சோற்றின் மகுளியையும் சிரட்டையில் சிரட்டையில் வார்த்துக் கொடுத்தான். இதையுண்ட புதியவன் வேப்ப மர நிழலே சொர்கமாய் நினைத்து உறங்கினான்.

## அருகெடுப்போர் வரவேற்பும் , பகிர்ந்து உண்ணுதலும் :

புதியவனின் சிறு தூக்கம் முடியும் வரை காத்திருந்தான் அன்னமய்யா. கண்விழித்த புதியவன் பெயர் கூறி அறிமுகமானான். அன்னமய்யா அவனை அழைத்துக் கொண்டு சுப்பையாவின் புன்செய் நிலத்திற்கு சென்றான். அங்கு அருகெடுத்து முடித்து விட்டு உண்பதற்கு அமர்ந்தவர்கள் , இவர்களையும் வரவேற்று கம்பஞ்சோற்றை உண்ணச் செய்தனர்.

## முடிவுரை :

“வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்”.

என்ற குறட்பாவிற்கேற்ப கரிசல் பகுதி மக்களின் விருந்தோம்பல் பண்பினை இக்கதை அழகாக உணர்த்துகிறது.